MCOP.No. 18/2017
Date : 09.10.2025
Pw – 1
பெயர்: பாமா
க/பெ: மணிவண்ணன்

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்தது எனது கணவர்தான். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. எனது கணவர் மீது மோதிய வாகனம் கார் ஆகும். விபத்து 12.09.2016 தேதியில் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். எனது கணவர் 2020ம் ஆண்டு இறந்துவிட்டார். 2016ம் ஆண்டு முதல் எனது கணவர் இற்நதுபோன 2020ம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலத்தில் எனது கணவர் தொடர்ந்து சிகிச்சை எடுத்துக்கொண்டு வந்தார் என்பதை காட்டுவதற்கு நான் மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. விபத்தில் எனது கணவருக்கு தொடை, முழங்கால், போன்ற இடங்களில் சிராய்ப்பு காயம் இருந்தது என்று சொன்னால் சரிதான். அவருக்கு முதுகுதண்டுவடத்திலும் காயம் ஏற்பட்டிருந்தது. எனது கணவர் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக 2016ம் ஆண்டு முதல் இறக்கும் வரையில் சிகிச்சையில் இருந்து வந்தார். சாட்சி தற்போது விபத்திற்கு பிறகு 3 மாதங்கள் தொடர்சிகிச்சையில் இருந்ததாக சாட்சியம் அளிக்கிறார். விபத்தில் ஏற்பட்ட காயங்களின் தொடர்ச்சியாகவே எனது கணவர் இறந்துபோனார் என்பதை காட்டுவதற்கு அவரது சடலக்கூராய்வு அறிக்கையை நான் தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் வீட்டில் வைத்துதான் இறந்துபோனார். அதன் பிறகுதான் எனது கணவருக்கு சடலக்கூராய்வு மேற்கொண்டோம். விபத்து சமயத்தில் எனது கணவர் அவருக்கு சொந்தமான யமகா இரு சக்கர வாகனத்தை தான் ஓட்டி சென்றார். அந்த இரு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு எனது கணவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விபத்தை எனது கணவர் தான் வலிய ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்று சொன்னாலும் அடிப்படை ஆதரவு அற்றது என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/– பாமா

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.